# QB365 Question Bank Software Study Material

## நிதிப் பொருளியல் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

50 x 1 = 50

1) தற்கால அரசு எனப்படுவது

(அ) நவீன அரசு எனப்படுவது (ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு **(இ) நலம் பேணும் அரசு**
(ஈ) காவல் அரசு

2) கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது.

(அ) வருமானம்-செலவு சமம் (ஆ) இரகசியம் (இ) வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தல்
**(ஈ) விளம்பரப்படுத்துதல்**

3) வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது

(அ) கட்டாயத் தன்மை (ஆ) பிரதிபலன் கருதாமை (இ) வரி மறுப்பு ஒரு குற்றம்
**(ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்**

4) ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?

(அ) சமத்துவம் விதி (ஆ) நிச்சயத்தன்மை விதி (இ) வசதி விதி **(ஈ) எளிமை விதி**

5) கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க
(i) மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை
(ii) அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசுப் பட்டியலில் இருந்து மாநில அரசுப் பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது.

(அ) i மட்டும் **(ஆ) ii மட்டும்** (இ) இரண்டும் (ஈ) ஏதுமில்லை

6) GST இதற்கு சமம்?

**(அ) விற்பனை வரி** (ஆ) தொழிற்குழும வரி (இ) வருமான வரி (ஈ) உள்ளாட்சி வரி

7) இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை

(அ) சமத்துவம் **(ஆ) வசதி** (இ) நிச்சயத்தன்மை (ஈ) நாட்டுப்பற்று

8) கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி?

(அ) கலால் வரி **(ஆ) வருமான வரி** (இ) சுங்க வரி (ஈ) சேவை வரி

9) கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?

(அ) தனிநபர் வருமான வரி (ஆ) நிறுவன வரி **(இ) வேளாண்மை வருமான வரி** (ஈ) கலால் வரி

10) அரசின் வருவாய் வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது

(அ) வட்டி (ஆ) இலாபம் மற்றும் இலாப ஈவு (இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்
**(ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்**

11) வருவாய் செலவு(Revenue Expenditure) வருவாய் வரவையைவிட (Revenue receipts) அதிகமாக இருந்தால், அது?

**(அ) வருவாய்ப் பற்றாக்குறை** (ஆ) நிதிப்பற்றாக்குறை (இ) வரவு செலவு பற்றாக்குறை
(ஈ) அடிப்படைப் பற்றாக்குறை

12) மொத்தச் செலவு கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால், அது

(அ) நிதிப்பற்றாக்குறை (ஆ) வரவு செலவு திட்ட பற்றாக்குறை (இ) முதன்மை பற்றாக்குறை

(ஈ) வருவாய் பற்றாக்குறை

13) பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது

(அ) பொருளாதார முன்னேற்றம் (ஆ) பொருளாதார நிலைத்தன்மை (இ) பொருளாதார சமத்துவம்

(ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

14) பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது

(அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்

(ஆ) அரசின் நடப்புக்கனக்குச் செலவு நடப்புக்கணக்கு வருவாயை விட அதிகம்

(இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம் (ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

15) பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை

(அ) கடனை மாற்றுதல் (ஆ) கடனை மாற்றுதல் (இ) பகுதியாகச் செலுத்துதல் (ஈ) இவை அனைத்தும்

16) பொதுக்கடனை மாற்றுதல் என்பது

(அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்

(ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்

(இ) குறுகியகாலப் பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட காலப் பத்திரங்களைத் தருதல் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

17) பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் சொல்லான (Bougette)விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்

(அ) சிறிய பை (ஆ) பெரிய பெட்டி (இ) காகிதங்கள் அடங்கிய பை (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

18) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?

(அ) வருவாய் பற்றாக்குறை (ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை (இ) நிதிப் பற்றாக்குறை

(ஈ) முதன்மைக் பற்றாக்குறை

19) நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?

(அ) இந்திய அரசின் நிதியினை (ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்

(இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல் (ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

20) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.
(i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது.
(ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்

(அ) i மட்டும் (ஆ) ii மட்டும் (இ) இரண்டும் (ஈ) இரண்டும் இல்லை

21) அரசின் வருவாய், செலவு, கடன்கள் மற்றும் நிதி நிர்வாகம் பற்றி விளக்குவது ______

(அ) பொதுச்செலவு (ஆ) பொதுவருவாய் (இ) பொது நிதி (ஈ) பொதுக் கடன்

22) மக்களின் சமூகத் தேவையை நிறைவேற்ற மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் செலவினமே ______ ஆகும்.

(அ) பொது வருவாய் (ஆ) பொதுச் செலவு (இ) பொது நிதி (ஈ) பொதுக்கடன்

23) 2011 கணக்கெடுப்பின் மக்கள் தொகை ______ கோடியாகும்.

(அ) 112 (ஆ) 121 (இ) 211 (ஈ) 36.7

24) 2018-19ல் மத்திய அரசின் மானியத்திற்கான செலவு _____ கோடியாகும்.

(அ) 9581 (ஆ) 21500 (இ) 2.29.715.67 (ஈ) 5.75.994

25) பொருட்களையோ அல்லது பணிகளையோ வாங்கும் நபர் மீத விதிக்கப்டுகிற வரி _____ வரியாகும்.

(அ) நேர்முக (ஆ) மறைமுக (இ) நிறுவன வரி (ஈ) சேவை

26) _____ என்பது நிதிக்கருவிகள் வாயிலாக அரசானது தனியார்துறையிலுள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும்.

(அ) பொது வருவாய் (ஆ) பொதுச் செலவு **(இ) பொதுக் கடன்** (ஈ) பொது நிதி

27) கடனுக்கே அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை ______ என்பர்.

(அ) பொது நிதி **(ஆ) மூழ்கும் நிதி** (இ) நேர்முக வரி (ஈ) மறைமுக வரி

28) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசின் வருவாய், செலவை விட குறைவாக இருந்தால் அது ______ வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

(அ) உபரி (ஆ) சமநிலை **(இ) பற்றாக்குறை** (ஈ) செயல்திறன்

29) முதலாவது நிதிக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

(அ) 1950 **(ஆ) 1951** (இ) 1956 (ஈ) 1960

30) பதினைந்தாவது நிதிக்குழுவின் தலைவர்

(அ) Dr.விஜய் L.கோல்கார் (ஆ) Dr.ய.V.ரெட்டி (இ) C.ரங்கராஜன் **(ஈ) N.K.சிங்**

31) யார் கூறினார்? "வரி என்பது ஒரு நபர் (அ) ஒரு நிறுவனம் அரசிடமிருந்து எந்தவொரு நன்மையும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயம் செலுத்தக் கூடியதாகும்".

**(அ) ஆடம் ஸ்மித்** (ஆ) டால்டன் (இ) அனடோல் முராட் (ஈ) பிலிப் E டெய்லர்

32) யார் கூறினார்? "அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும், கொள்கைகளையும் ஆராய்வதே பொதுநிதியியல்".

**(அ) ஆடம் ஸ்மித்** (ஆ) டால்டன் (இ) அனடோல் முராட் (ஈ) பிலிப் E .டெய்லர்

33) பொதுநிதியியல்______ துணைப்பிரிவுகளை உள்ளடக்கியது.

(அ) 4 (ஆ) 6 **(இ) 5** (ஈ) 7

34) ஆடம் ஸ்மித்தின் வரி விதிப்பு விதிகள் ______

**(அ) 4** (ஆ) 6 (இ) 5 (ஈ) 7

35) _____ அரசின் செலவு, பொது செலவின் விளைவுகள் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்றவை சார்ந்த கோட்பாடுகளை கொண்டது.

(அ) பொதுக்கடன் (ஆ) நிதி நிர்வாகம் (இ) பொதுச் செலவு **(ஈ) பொது வருவாய்**

36) நிதிக் கொள்கையின் கருவி எது?

(அ) வரி (ஆ) மானியம் (இ) பொதுக்கடன் **(ஈ) அனைத்தும்**

37) அனைத்து சமூகத்திற்கும் பலன் அளிக்கின்ற பொது செலவு எது?

(அ) சமூக பாதுகாப்பு (ஆ) நீதி நிர்வாகம் **(இ) போக்குவரத்து** (ஈ) மானியம்

38) ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு நேரடியாக நன்மை தரக்கூடிய மற்றும் சமுதாயத்திற்கு மறைமுகமாக நன்மை தரக்கூடிய செலவு எது?

**(அ) சமூக பாதுகாப்பு** (ஆ) நீதி நிர்வாகம் (இ) போக்குவரத்து (ஈ) மானியம்

39) பாதுகாத்தல் பணி எது?

(அ) காவல்துறை (ஆ) நீதிமன்றங்கள் (இ) இராணுவம் **(ஈ) அனைத்தும்**

40) நகரமயமாக்கலினால் ______ யில் அதிக பொது செலவு ஏற்படுகிறது.

(அ) சட்டம் ஒழுங்கு (ஆ) கல்வி (இ) குடிமை வசதி **(ஈ) அனைத்தும்**

41) மறைமுக வரி_______ கொண்டவை

(அ) விகிதாச்சாரம் **(ஆ) தேய்வீதம்** (இ) வளர்வீதம் (ஈ) அனைத்தும்

42) வரி வருவாய் எது?

(அ) நன்கொடை **(ஆ) செஸ்** (இ) தண்டத்தொகை (ஈ) மானியங்கள்

43) நேர்முக வரி_______ கொண்டவை.

(அ) விகிதாச்சாரம் (ஆ) தேய்வீதம் **(இ) வளர்வீதம்** (ஈ) அனைத்தும்

44) சர்ச்சைக்குரிய கடன் தீர்வை முறை எது?

**(அ) மூலதனத் தீர்வை** (ஆ) கடனை மாற்றுதல் (இ) கடன் மறுப்பு (ஈ) பகுதியாக: செலுத்துதல்

45) 'bougette' என்பது ஒரு _____ வார்த்தை

(அ) ஆங்கில **(ஆ) பிரஞ்ச்** (இ) ஸ்பானிய (ஈ) லத்தின்

46) ______ வரவு செலவு திட்டம் " நொண்டி :வாத்து வரவு செலவு திட்டம்" என்றும் : அழைக்கப்படுகிறது.

(அ) துணை (ஆ) மூலதன **(இ) நிதிக்கு வாக்கெடுப்பு** (ஈ) பூஜ்ய

47) _______ வரவு செலவு திட்ட அனுமதி அதிக பட்சம் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

(அ) பூஜ்ய **(ஆ) நிதிக்கு வாக்கெடுப்பு** (இ) மூலதன (ஈ) துணை

48) பூஜ்ய வரவு செலவு திட்டத்தை இந்திய _____ ல் தாக்கல் செய்தது.

**(அ) 1987-88** (ஆ) 1949-50 (இ) 2000 (ஈ) 1979-80

49) மாநிலங்களில், எல்லா பண மசோரதாக்களும் தாக்கல் செய்யப்படும்.

**(அ) சட்டப்பேரவை** (ஆ) மக்களவை (இ) பாராளுமன்றம் (ஈ) எதுவுமில்லை

50) வரவு செலவு திட்டத்தை கட்டுப்படுத்தும் பாராளுமன்ற குழு எது?

(அ) பொது கணக்கு குழு (ஆ) மதிப்பீட்டு குழு **(இ) அ மற்றும் ஆ** (ஈ) எதுவுமில்லை